1978 மார்ச் 9]

திரு. மு. அரங்கநாதன் : தலைவரவர்களே............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதெல்லாம் மானியக் கோரிக்கையில் வரப்போகிறது. அப்பொழுது நிம்மதியாகப் பேசலாம்.

மாவுத்தம்பதி மலைச்சாதி மக்களுக்கு வீடுகள்.

*415 வினா— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், மாவுத் தம்பதியிலுள்ள மலைசாதி மக்களுக்கு வீடு கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டு எவ்வளவு வீடுகள் கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவரவர்களே, அங்கு மலைசாதி மக்கள் ஏராளமாக வசிக்கின்ற காரணத்தால் அவர்கள் வீடேயில்லாமல் சிறு சிறு குடிசைகளில் வாழ்ந்து வருகிறார்கள். மேற்கொண்டாவது அவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மலைசாதி மக்களுக்கு வீடு கட்டித் தருகின்ற திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அந்தப் பகுதியில் குடிசைகளில் வாழ்கிறார்கள் என்பது உண்மை. அரசு இதுபற்றி பரிசீலிக்கும்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, குடியரசுத் தலைவரின் ஆட்சிக் காலத்தில் ஆதிவாசி மக்களுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டத்தை நிறுத்தி வைத்துள்ளனர் என்பது அரசுக்குத் தெரியுமா ? அதற்கு என்ன காரணம் என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் ஆதிவாசிகளுக்கு வீடு கட்டித் தருகிற திட்டம் கொஞ்சம் நிறுத்தப்பட்டது. வீடுகளின் வடிவமைப்பை மாற்றியமைக்கலாமா என்று அறிய வேண்டுமென்பதற்காக திரு. செல்வம் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் அறிக்கையை எதிர் பார்த்த காரணத்தால் அந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்படவில்லை.

[1978 மார்ச் 9

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியத்திலுள்ள அந்த மாவுத்தம்பதி என்ற இடத்தில் வாலையாற்றுப் பக்கத்தில் மலையடிவாரத்தில் இருளர் என்ற மலை சாதியினருக்கு ஃபாரஸ்ட் நிலத்தில் கட்டிய வீடுகளை ஃபாரஸ்ட் அதிகாரிகள் கொளுத்தி அவர்களுக்கு வீடு இல்லாமல் செய்திருக்கிறார்கள். அந்த இடத்தில் வீடு கட்டிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா? வீடு கட்டும் திட்டமே இல்லையென்று சொன்னால் அவர்கள் இருக்க முடியாமற் போய்விடும். எனவே இதுபற்றி மறு பரிசீலனை செய்யப்படுமா? அவர்கள் ஊருக்குச் செல்ல ரோடு போடப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, காட்டிலாக்கா நிலத்தை ஒதுக்கித் தருவது என்பது மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் செய்ய வேண்டியது. வேறு பகுதியில் நிலம் இருந்தால் அதை இந்தத் துறை பொறுப்பேற்று அவர்களுக்கு வீட்டு மனை வழங்கத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாதை வசதி தேவைப்பட்டால் அதையும் பரிசீலிக்கிறேன்.

தனியார் போக்குவரத்து நிறுவனத்தின் தொழிலாளர்கள்.

*477 வினு— திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு, தனியார் பேருந்துகளை ஏற்றுக் கொண்டாலும் அல்லது அவர்கள் வழித் தடங்களை சரண்டர் செய்தாலும், பாதிக்கப்படும் தொழிலாளர்களை அரசு நிறுவனங்களில் பணி புரிய ஏற்றுக் கொள்ளும் திட்டம் உண்டா?

(ஆ) திருநெல்வேலி ஸ்ரீராம் பாப்புலர் பஸ் நிறுவனத்தில் பணியாற்றிய 104 தொழிலாளர்கள் அரசு நிறுவனங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) தனியார் தாங்களாகவே போக்குவரத்து உரிமங்களை ஒப்படைக்க முன் வந்து அதைப் போக்குவரத்துக் கழகங்கள் ஏற்றுக் கொண்டால் பாதிக்கப்படும் தொழிலாளர்களை மேற்படி கழகங்கள் பணியில் அமர்த்திக் கொள்ள முன் வரும்.

ஆனால் தனியார் பொருளாதார அடிப்படையில் பேருந்துகளை நிறுத்தி அவற்றின் உரிமங்களை மாவட்டப் போக்குவரத்து ஆணையரிடம் ஒப்படைத்துவிட்டால், அப் பேருந்துகளில் பணியாற்றிய தொழிலாளர்களை நேரடியாக எடுத்துக் கொள்ள இயலாது.

(ஆ) இல்லை.